# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 08.03.2022 | supeedsam.com | supeedsam@gmail.com







### வடக்கு, கிழக்கிலிருந்து

# படைகள் எப்போது வெளியேறுகின்றதோ அப்போதே போதைப்பொருளை கட்டுப்படுத்த முடியும்

## சி.வி.விக்கினேஸ்வரன் எம்.பி.



பாதுகாப்புப் படைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து எப்போது வெளியே செல்கின்றனரோ அப்போதே எமது பகுதிகளில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியுமென வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும்,பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விழுது ஆற்றல் மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பொதுமக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பதிலளிக்கையில்:

02 ஆம் பக்கத்தில்...

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க ஐ.நா. தலையிட வேண்டும்

(காந்தன்)



ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியை வெளிக் கொண்டுவரவும் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்கவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தலையிட வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் பேசிய அவர், தற்கொலை குண்டுத் தாக்குதலில் 82 குழந்தைகள் உட்பட 269 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 14 நாடுகளைச் சேர்ந்த 47 வெளிநாட்டினர் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர்

02 ஆம் பக்கத்தில்...

## மஹிந்தவின் கருத்து முட்டாள்தனமானது

### விமல் பகிரங்க குற்றச்சாட்டு



(ஊர்காவலன்)

எரிபொருள் நெருக்கடி தொடர்பாக அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்து முட்டாள்தனமானது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி என்ற தவறான கருத்து காரணமாகவே மக்கள் அச்சத்தில் உள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கடுமையான டொலர் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் இதுபோன்ற அறிக்கைகள் நகைச்சுவை மற்றும் முட்டாள்தனமானவை என விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் எரிபொருள் கையிருப்பு தீர்ந்துவிடும் என்ற அமைச்சரின் அறிவிப்பினால் இந்த

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் துப்பாக்கிச் சூடு!!

### இருவர் படுகாயம்



திருகோணமலை கிண்ணியா காவற்துறைப் பிரிவுக்குட்பட்ட நடுவூற்று பகுதியில் நேற்றிரவு 6.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

### மட்டக்களப்பில்

## காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்!

(மட்டு நிருபர்)

காணமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நியாயம் கிடைக்க சர்வதேசம் தலையிட வலியுறுத்தி நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பில் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று சர்வதேச மகளிர் தினம் அனுஸ்டிக்கப்படவுள்ள நிலையில் வட,கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அமைப்பினால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

02 ஆம் பக்கத்தில்...



### போதுஜன பேரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தலைமையில்

## சஜித் அலுவலகம் மீது முட்டைவீச்சு



(காந்தன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலக வளாகத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது மக்களுக்கு என்ன செய்தது

02 ஆம் பக்கத்தில்...

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் கோகுலதாசன் பிணையில் விடுதலை!



மட்டக்களப்பு மாவட்ட சுயாதீன ஊடகவியலாளர் முருகுப்பிள்ளை கோகுலதாசன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் இன்றைய தினம் வழக்குத் தவணை இடம்பெற்ற

02 ஆம் பக்கத்தில்...

## இன்று எழரை மணிநேர மின்வெட்டு

இன்று செவ்வாய்க்கிழமை நாட்டின் சில வலயங்களுக்கு ஏழரை மணிநேரம் மின் துண்டிப்பு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

காலை 8 மணி முதல் இரவு 11 மணி வரையான காலப்பகுதியில் 2 கட்டங்களாக

02 ஆம் பக்கத்தில்...







# டக்ஸன் பியூஸின் உடலுக்கு ஆயிரக்கணக்கான போது மக்கள் ஒன்று திரண்டு அஞ்சலி











(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மைந்தன் தேசிய கால்பந்தாட்ட அணி வீரர் காலம் சென்ற டக்ஸன் பியூஸ்லஸின் உடல் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் நல்லடக்கம்.

மன்னார் பனங்கட்டு கொட்டு பகுதியை சேர்ந்த டக்ஸன் பியூஸ் மாவட்ட அணிஇமாகாண கால்பந்தாட்ட அணி மற்றும் தேசிய அணி வீரராக பிரகாசித்து வந்த நிலையில் மாலைதீவு கழக அணி ஒன்றுக்காக ஒப்பந்த ரீதியாக விளையாடிவந்த நிலையில் மரணம் அடைந்தார்.

அன்னாரின் உடல் பொது மக்களின் அஞ்சலிக்காக அவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த நிலையில் திங்கள்கிழமை (07) மதியம் 1 மணியளவில் ஊர்வலமாக நல்லடக்கத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

மதத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள்,விளையாட்டு வீரர்கள் இலங்கை உதைபந்தாட்ட அணி வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் இவடமாகாண காலப்ந்தாட்ட அணி வீரர்கள் மற்றும் மன்னார்மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மாத்திரம் அல்லாது ஆயிரக்கனக்கான மக்கள் பியூஸின் உடலுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

பியூஸின் உடல் வீட்டில் இருந்து ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு புனித செபஸ்ரியார் பேராலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டுக்கு பின்னர் மன்னார் பொது மைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரின் பூதவுடல் மன்னாருக்கு எடுத்து வரப்பட்டபோதும் அவ்வாறு இவரின் இறுதி கிரிகையின்போதும் மன்னார் நகர் மக்கள் வெள்ளத்தால் மூழ்கியிருந்ததுபோல் காடசியளிக்கப்பட்டது.

அதாவது மன்னார் மாவட்டத்தில் புனித தளங்களாக காணப்படும் மடு மற்றும் திருக்கேதீஸ்வர ஆலயங்களில் முன்னைய காலங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றபோது எவ்வாறு பக்தர்கள் வெள்ளம் காணப்படுமோ அவ்வாறான ஒரு மக்கள் வெள்;ளமே இவ் நிகழ்வுகளில் காணக்கூடியதாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

டக்ஸன் பியூஸ்லஸ தான் மாவட்ட ரீதியில் மாகாண ரீதியில் தேசிய ரீதியில் மட்டுமல்ல உலகலாவிய ரீதியிலும் இவ் கால்பந்தாட்டத்தின் மூலம் தனது நாமம் மட்டுமல்ல தனது இலங்கை நாட்டினதும் தனது பிறந்த மண்ணாகிய மன்னாரின் புகழ் ஓங்கப்பட வேண்டும் என கனவு கண்டவர் ஈற்றில் அவற்றை நனவாக்கிச் சென்றவர்தான் இந்த வீரர். அதுமட்டுமல்ல மன்னார் மாவட்டத்தில் விளையாட்டுக்கென பல இடங்களில் சரியான மைதானங்கள் அற்ற நிலையாலும் நவீன கருவிகளாலும் உடற்பயிற்சி விளையாட்டுக்கள் அருகிக் கொண்டு செல்லும் இவ் சமகாலத்தில் மறைந்த மன்னார் மைந்தனும் உலகம் போற்றும் கால்பந்தாட்ட வீரனுமான டக்ஸன் பியூஸ்லஸ; தனது இறுதி கிரிகையின்போது தனது மண்ணின் மைந்தர்களுக்கு இறுதியாக செய்தி ஒன்றையும் விட்டுச் சென்றுள்ளார் என்றும் பலரின் எண்ணங்களில் உதயமாகியுள்ளன. நான் படித்து பட்டம் பதவி பெற்றிருக்கின்றேனோ இல்லையோ அது ஒருபுறமிருக்க ஒரு விளையாட்டு வீரனுக்கு கிடைத்துள்ள பெருமை என்னவென்று தனது உடலின் இறுதி சடங்கின்போது மன்னார் நகரில் ஒன்று திரண்ட மக்கள் வெள்ளம் எடுத்துக் காட்டுகின்றது என அந்த வீரர் சொல்லாமல் சொல்லிச் சென்றுள்ளார் என்பதாகும்.

ஆகவே இறுதிவேளையிலும் விளையாட்டுத் துறைக்கு மன்னாரில் உரமிட்டுச் சென்றிருக்கும் இவ் வீரரின் ஆன்மாவின் கனவு நனவாகட்டும் .

## திருமலையில் துப்பாக்கிச் சூடு!! இருவர் படுகாயம்

பின்னர் காயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் நஜீம்கான் வசீம் வயது (30), ஸாகுல் ஹமீட் முகம்மது றமீஸ் வயது(30 )ஆகிய இருவரும் பலத்து காயத்துக்குள்ளாகியுள்னனர். மணல் வியாபாரத்தில் ஏற்பட்ட தகராறுகளே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிண்ணியா காவற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில் காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்...

மட்டக்களப்பு காந்திபூங்காவில் ஒன்றிகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபி வரையில் ஊர்வலமாக வந்து அங்கு கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் மற்றும் கோறளைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் குணசேகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோருக்கான நீதி,அரசியல் கைதிகளை நிபந்தனையில்லாமல் விடுதலைசெய்,தமிழின படுகொலைக்கான சர்வதேச நீதி,பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்கு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் காரணமாக காந்திபூங்காவில் பெருமளவான பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும் குவிக்கப்பட்டிருந்ததுடன் பெருமளவானோர் போராட்டத்தில் இணைந்திருந்தனர்.

எங்கே எங்கே எமது குழந்தைகள் எங்கே,ஐநாவே நாம், அழுவது உமக்கு கேட்கவில்லையா,சர்வதேசமே நீதியைப்பெற்றுத்தா?,குடும்பம்,குடும்பமாக ஒப்படைக்கப்பட்ட சிறார்கள் எங்கே?,சிறுவர்களை கடத்திவிட்டு அரசே சிறுவர் உரிமை பற்றி பேசாதே,முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை மறக்கமாட்டோம் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.




## இன்று எழுரை மணிநேர மின்வெட்டு

இந்த துண்டிப்பு அமுலாக்கப்படும் என அந்த சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, E மற்றும் F ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் சுழற்சி முறையில் 5 மணித்தியாலங்களுக்கும், மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரை இரண்டரை மணித்தியாலங்களுக்கும் மின் துண்டிக்கப்படவுள்ளது.

P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையான காலப்பகுதியினுள் 2 மணித்தியாலங்களுக்கும், மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலத்துக்கும் மின் துண்டிப்பு அமுல்படுத்தப்படும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்...

போது இவருக்கு நீதிபதி இரண்டு இலட்சம் சரீரப் பிணை வழங்கியதோடு, ஒவ்வொரு மாதமும் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை காவல் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் அடுத்த தவணை எதிர்வரும் 13.06.2022 அன்று நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதி தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர் கடந்த 2020.11.28 ஆம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற...

என்பதை கோரியே குறித்த போராட்டம் இடம்பெற்றது.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தலைமையில் குறித்த போராட்டம் இடம்பெற்றதாக அறியமுடிகின்றது.

மேலும் ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகம் மீது முட்டைகள் வீசப்பட்டதோடு வாகனங்கள் மற்றும் கைகளில் சில பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பதற்றமான சூழ்நிலையை அடுத்து, மதுர விதானகே தலைமையில் குழு அங்கிருந்து கலைந்து சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மஹிந்தவின் கருத்து முட்டாள்தனமானது...

தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார். வங்கிகளில் இருந்து பணம் வழங்கப்படவில்லை என்றால், எரிபொருள் மற்றும் எரிவாயுயை இறக்குமதி செய்ய முடியாது என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.

## வடக்கு, கிழக்கிலிருந்து....

நான் முதலமைச்சராக இருந்த போது கொழும்பில் இடம்பெற்ற கூட்டங்களின் போது போதைவஸ்து பாவனை குறித்து உயர் மட்டங்களிடம் சில கேள்விகளை எழுப்பியிருந்தேன். வடக்கு- கிழக்கில் 2009 மே மாதம் 18திகதி வரை இல்லாத போதைவஸ்து இப்போது காணப்படுகின்றது.

தற்போது இவ்வளவு பாதுகாப்புக்கு மத்தியில் அன்று இல்லாத ஒன்று எப்படி வருகின்றது

என்ற கேள்வியினை கேட்டிருந்தேன்.

அந்தக் காலத்தில் இல்லாத ஒன்று இன்று உள்ளது என்றால் பாதுகாப்புத் தரப்பும் அதனோடு சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது தான் எனது கருத்து.

எப்போது பாதுகாப்புப் படைகள் வடக்கு-கிழக்கை விட்டு வெளியேறுகின்றனரோ அது போல் இங்கு பொலிஸார் தமிழ் பேசுபவர்களாக இருக்கின்றனரோ அப்போது தான் போதைவஸ்தினை தடுக்க முடியும்.

இன்று பள்ளிகளில் போதைப்பொருட்களை வீசி விட்டு செல்லும் நிலைமை காணப்படுகின்றது. இதனை பெண் பிள்ளைகள் கூட அதனை தூக்கிச் செல்லும் நிலைமை உள்ளது.இது நிறுவன ரீதியாக இடம்பெறுகின்றது.யார் யார் போதைவஸ்துடன் தொடர்பில் உள்ளனர் என்று பொலிஸாருக்குத் தெரியும்.எப்போது அரசியல் ரீதியாக முழுமையான மாற்றங்களை கொண்டு வருகின்றோமோ அப்போதே எங்கள் இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்த முடியுமென்றார்.

## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு...

காயமடைந்தனர் என்றும் கூறினார்.

இந்த தற்கொலை குண்டு தாக்குதல் இஸ்லாமிய தீவிரவாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட போதும் இந்த படுகொலையில் பெரும் அரசியல் சதித்திட்டம் இருப்பது அடுத்தடுத்த விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் பலமுறை தாம் கோரிக்கை விடுத்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கு தற்போதைய இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறினார்.

அத்தோடு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணருவதற்கும், பொறுப்பு கூறவேண்டியவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு பதிலாக, நீதிக்காகக் குரல் கொடுப்பவர்களை அடக்கும் நடவடிக்கை இடம்பெறுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஆகவே சாட்சிய சேகரிப்பு நடவடிக்கையோடு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை கண்டறிய பக்கச்சார்பற்ற விசாரணையை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டும் என பேரவையையும் அதன் உறுப்பு நாடுகளையும் அவர் கேட்டுக்கொண்டார்.

# திருமலை சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்





(எப்.முபாரக்)

திருகோணமலை சிறைச்சாலையும், திருகோணமலை சிறைச்சாலை சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கமும் இணைந்து திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் %5 பிள்ளைகளுக்கு காற்பாதனி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி (6) வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் திருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் சிறை கைதிகள் மற்றும் விளக்கமறியல் கைதிகளின் பிள்ளைகளுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப், பிரதான ஜெயிலர் சம்பத் ஜெயவர்த்தன, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை, சிறைச் கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு.பாஸ்கரன் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், கைதிகளின் பிள்ளைகள் பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

# இன்று கல்முனையில் சர்வதேச மகளிர் தினவிழா

(காரைதீவு சகா)

மணித அபிவிருத்தித் தாபனத்தின் அம்பாறை மாவட்ட சகவாழ்வுக்குழுக்கள் இணைந்து நடாத்தும் மாபெரும் சர்வதேச மகளிர் தினவிழா, இன்று(8) கல்முனை கிறிஸ்ரா இல்லத்தில் மகளிர் அணித்தலைவி றிலீபா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமஅதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் புகழ்பெறு மற்றும் அதிதியாக மனிதஅபிவிருத்தித்தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் கலந்துசிறப்பிக்கவிருக்கின்றார். கௌரவ விசேட அதிதிகள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

மகளிர் சிறப்பு அதிதிகளாக மனித அபிவிருத்தித்தாபன மகளிர்விவகார இணைப்பாளர் திருமதி லோகேஸ்வரி சிவப்பிரகாசம் ,தென்கிழக்கு பல்கலைக் கழக சிரேஸ்டவிரிவுரையாளர் கலாநிதி அனுசியாசேனாதிராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இலங்கையில் மனிதஉரிமைகள் மற்றும் சமுகசேவைகள் தொடர்பில் ஆற்றிவரும் அளப்பரிய சேவைக்காக நிகழ்வில் மனிதஅபிவிருத்தித்தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் விசேடவிருது வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

சகவாழ்வுக்குழு உறுப்பினர்களின் சிறப்பான வித்தியாசமான கலைநிகழ்ச்சிகள் மேடையேறவுள்ளன என இணைப்பாளர் பி.ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

**கல்முனையில் மற்றுமொரு மகளர்தினவிழா!**

இதேவேளை, கல்முனை வடக்கு பிரதெச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் நடாத்தும் சர்வதேச மகளிர் தின விழா பாண்டிருப்பு கலாசார மண்டபத்தில் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமஅதிதியாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா, கௌரவஅதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவிருக்கின்றனர் என மாதர்சங்க பிரிதிநிதி திருமதி நித்தியகைலேஸ்வரி தெரிவித்தார்.




# மொழிப்பயிற்சியை முடித்த அரச உத்தியோகத்தர் நிகழ்வு









(குகதர்சன்)

அரசாங்கத்தினால் அரச உத்தியோகத்தர்களின் மொழித்துறையை விருத்தி செய்யும் நோக்கில் அரச மொழிகள் திணைக்களத்தினால் மொழிப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் தமிழ் மொழி மூலம் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் சிங்கள மொழித்துறையை விருத்தி செய்யும் நோக்கில் அரச மொழிகள் திணைக்களத்தினால் 150 மணித்தியாளம் பயிற்சியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கான இறுதிநாள் நிகழ்வு கல்குடா கல்வி வலய கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி.எஸ்.கங்கேஸ்வரன், திருமதி.ஆர்.றிஸ்மியா பானு, கணக்காளர் வி.கணேசமூர்த்தி, நிருவாக உத்தியோகத்தர் எச்.எம்.பாறுக், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.துஜோகாந், சிங்கள கற்கை நெறி ஆசிரியர்களாக எஸ்.தனலெட்சுமி, எஸ்.திலினி, கல்வி வலய உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கல்கு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், செங்கலடி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இப்பாடநெறியை பூர்த்தி செய்துள்ளதுடன், அவர்களது சிங்கள மொழியிலான கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது.

# 'எனக்குள்ளே' இசை வெளியீட்டு விழாவில் கண் தானம் செய்த படக்குழுவினர்!!









இந்திய சினிமா துறைக்கு நிகராக பல்வேறுபட்ட கலைப் படைப்புகள் மட்டக்களப்பு மாவட்ட கலைஞர்களால் வெளியிடப்பட்டு வரும் நிலையில் அண்மைக்காலத்தில் மட்டக்களப்பு வர்த்தக சினிமா துறையில் பாரிய சாதனை படைத்த 'சிப்ஸ் சினிமாஸ்' தயாரிப்பு நிறுவனமானது தனது இரண்டாவது படைப்பாக இம்மாதம் 19 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிடப்படவிருக்கும் ஓர் நடுத்தர நீளத் திரைப்படமான 'எனக்குள்ளே'' எனும் திரைப்படத்தினை தயாரித்து வருகின்றது.

அந்தவகையில் புதிதாக சமூக சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுவரும் 'எனக்குள்ளே' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வில்லியம் மண்டபத்தில் பிரமாண்டமான முறையில் இடம்பெற்றுள்ளது.

'சிப்ஸ் சினிமாஸ்' உரிமையாளரும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளருமாகிய வைத்தியகலாநிதி சுகுணன் குணசிங்கம் அவர்களது தலைமையில், 'எனக்குள்ளே' திரைப்படத்தின் தயாரிப்பு மேற்பார்வையாளர் முரளீதரன் அவர்களது நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற இந்த நிகழ்வை இப்படத்தின் இயக்குநர் கோடீஸ்வரன் மற்றும் அவரது படக்குழுவினர் சிறந்த முறையில் நடாத்தியிருந்தனர்.

இசை வெளியீட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பாரதி கெனடி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், குறித்த நிகழ்விற்கு விசேட அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப்பிரிவின் பீடாதிபதி கலாநிதி ஜே.கெனடி, கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவப்பீட சிரேஸ்ட விரிவுரையாளர் கந்தசாமி அருளானந்தம், மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வீ.ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் பிரதி சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். மயூரன், மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி.வளர்மதி ராஜ், சமூக பற்றாளர் சோமசூரியம் திருமாறன்,

மகுடம் இதழ் ஆசிரியர் மைக்கல் கொலின் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர். நம் நாட்டி கலைஞர்களின் நடிப்பில் 'சிப்ஸ் சினிமாவினால் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் 'எனக்குள்ளே'திரைப்படத்தின் இசை இறுவெட்டின் முதல்ப்பிரதி 'சிப்ஸ் சினிமாஸ்' உரிமையாளரும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளருமாகிய வைத்தியகலாநிதி சுகுணன் குணசிங்கம், தயாரிப்பாளர்களான முரளீதரன், கோடீஸ்வரன் மற்றும் இசை அமைப்பாளர் கேசாந்த் குலேந்திரன் ஆயோரினால் பிரதம அதிதிக்கு வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கேஷாந்த் குலேந்திரனின் இசையமைப்பில் உருவான மூன்று பாடல்கள் வெளியிடப்பட்டதுடன் மட்டக்களப்பில் உள்ள சில மேடைக் கலைஞர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் இதன்போது களம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. இப்படத்தில் பணியாற்றியவர்கள் தமது கண்களைத் தானம் செய்திருந்ததுடன் அதற்கான சான்றிதழ்கள் 'எனக்குள்ளே 'விழா மேடையில் வைத்து வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

படத்தின் பாடல்களும், டீசரும் மிக விரைவில் சமுக வலைத்தளங்களில் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்டு உரிமை இழந்து நிற்கும் எமது தமிழினத்திற்காக நாங்கள் ஒன்றாகச் செயற்பட வேண்டும்

## (பா.உ கோ.கருணாகரம் ஜனா)

(சுமன்)

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக இருந்தால் நமது மக்களின் தீர்வு விடயத்தில் இன்னும் விரைவாகக் கூடுதலான பெறுபேறுகளை நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும். பாதிக்கப்பட்டு உரிமை இழந்து நிற்கும் எமது தமிழினத்திற்காக நாங்கள் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ. கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வடம் 46ஃ1 தீர்மானம் கடந்த வரும் மார்ச் மாதத்தில் மனித உரிமைகள் ஆணையகத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்த அடிப்படையில் இலங்கையில் பொறுப்புக் கூறல் என்பது பின்னடைவைச் சந்தித்துள்ளதாக ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளர் மிச்சல் பச்லட் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு முறையும் ஐநா கூட்டத்தொடர் நடைபெறும் போதும் பாதிக்கப்பட்ட எமது தரப்பில் இருந்து பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று அந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதும், நேடியாகப் பங்குபற்றமால் இங்கிருந்து இங்கு நடைபெறும் அநியாயங்களை மனித உரிமை மீறல்களை கடிதம் மூலமாக அனுப்பி வைப்பதாகவும் நிகழ்வுகள் நடைபெறும்.

அந்த வகையில் இவ்வருடமும் ஐநா கூட்டத்தொடரை முன்நிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா அவர்கள் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு கடிதம் அனுப்பியிருக்கின்றது. அதே போன்று விபரமாக இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள், காணி அபகரிப்புகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடாக நடைபெறும் கைதுகள் தொடர்ந்தும் அரசியற் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது போன்ற பல விடயங்களை உள்ளடக்கி தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் தமிழீழ விடுதலை இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த்



தேசியக் கட்சி போன்ற ஐந்து கட்சிகளும் இணைந்து விபரமான அறிக்கையை அனுப்பியிருந்தோம். அந்த கடிதத்தின் அடிப்படையில் ஐநா அதிகாரிகள் மெய்நிகர் மூலமாக இந்த ஐந்து கடசிகளின் தலைவர்களுடனும் உரையாடியிருந்தார்கள். இதன்போது உரையாடப்பட்டதும், ஐந்து கட்சிகளினால் அனுப்பப்பட்ட கடிதத்திலுள்ளதுமான பல விடயங்கள் ஆணையாளரினால் 48 அங்கத்துவ நாடுகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள 13 பக்க அறிக்கையிலே உள்ளடக்கப்பட்டிருப்பது எங்களுக்கு உண்மையிலே மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்த அறிக்கையின் நிமித்தம் இலங்கையில் பொறுப்புக் கூறல் என்பது முறையாக நடைபெறவில்லை, சகலராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசிலமைப்பின் ஊடாக நிரந்தர அரசியற் தீர்வினைக் காண்பதற்குரிய முக்கியத்துவம் போன்றன வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அதற்கும் மேலாக அண்மையில் இடம்பெற்ற மெய்நிகர் கலந்துரையாடலிலே இந்தியா சார்பில கலந்து கொண்ட ஐநா அதிகாரி 13வது திருத்தச் சட்டம் உள்ளடங்கலாக, ஒரு சிலர் இங்கு கொக்கரிப்பது போல 13வது திருத்தச் சட்டம் மாத்திரம் அல்ல. 13வது திருத்தம் உள்ளடங்கலாக இலங்கையிலே தமிழர்கள் சமத்துவமாக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கான அதிகாப்பரவலாக்களுடன் கூடிய ஒரு அரசியற் தீர்வு கொண்டு வரப்பட்டு மிக விரைவில் ஒரு மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். இவைகளையெல்லாம் பார்க்கும் போது எமக்கான ஒரு தீர்வு மிக விரைவில் வரும் என்பதில் ஒரு அளவிற்கு நிம்மதியடையும் நம்பிக்கை வந்துள்ளது. தமிழ்த் தேசியப் பரப்பில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அனைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கு நிலையில் இருந்த காலத்தில் ஒற்றுமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அரசியல் ரீதியாகப் போராடிய கட்சிகள் 2009ற்குப் பிற்பாடு இந்தக் கட்சிகள் பிளவு பட்டுள்ளன. இந்தக் கட்சிகள் பிளவுபடுவதற்கான காரணங்களும் எமக்குத் தெரியாமலில்லை. இந்த விடயத்திலே நாங்கள் நீ பெரிது நான் பெரிது என்று பார்க்காமல் இன்று இந்த ஐந்து கட்சிகள் ஒன்றாக இணைந்து ஐநா ஆணையாளருக்குக் கடிதம் எழுதியதைப் போன்று ஏனைய அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக இருந்தால் இன்னும் விரைவாக கூடுதலான பெறுபேறுகளை நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்த வகையிலே பாதிக்கப்பட்டு உரிமை இழந்து நிற்கும் எமது தமிழினத்திற்காக நாங்கள் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்பதை மிகவும் வலிந்து கேட்டுக் கொள்கின்றேன்.

# மட்டக்களப்பு அருவி பேண்கள் வலயப்பினால் மகளிர் தினத்தையோட்டி இடம்பெற்ற போட்டி நிகழ்வுகள்











(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையப்பினால் மகளிர் தினத்தையொட்டி போட்டி நிகழ்வுகள் 05 திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

'பாராபட்சத்தை உடைத்தெறி பெண் சமத்துவத்தை மதித்திடு' எனும் தொணிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி குறித்த போட்டி நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி திருமதி.மயூரி ஜனன் தலைமையில் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கே.கருணாகரன் அவர் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்த நிகழ்விற்கு விசேட அதிதியாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள பிரதேச மட்ட அணிகள் எல்லே மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளில் பங்கேற்பதற்காக கலந்துகொண்டிருந்ததுடன், விளையாட்டு நிகழ்வுகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மகளீர் தினத்தினை முன்னிட்டு அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான மயூரி ஜனன் அவர்களினால் அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# பூமி பூஜையில் சேவையாளர்களுக்கு கௌரவம்!





(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கென கல்முனை வாடி வீட்டு வீதியில் கிடைக்கப்பெற்ற காணியில் புதிய கட்டிடம் அமைப்பதற்கான பூமி பூசை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரனின் தலைமையில் இப்பூமிபூஜை இடம்பெற்றது.

குறித்த காணியினை வைத்தியசாலைக்கு பெற்றுக்கொடுப்பதற்கு உதவிசெய்த வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர்களான டாக்டர் சாமித்தம்பி இராஜேந்திரன் , டாக்டர் நடராஜா ரமேஷ், கல்முனை மாநகரசபை உறுப்பினரும் சமுகசெயற்பாட்டாளருமான சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கூடவே இந் நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மற்றும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், வைத்தியசாலையின் நலன்விரும்பிகள் ,வைத்தியசாலை முன்னாள் இந்நாள் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பல தடைகளை தாண்டி இந்த காணி வைத்தியசாலைக்கு கிடைக்க தொடர்ந்து பாடுபட்ட அனைவருக்கும் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் நன்றிகளை தெரிவித்தார்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு கௌரவிப்பு

(றியாஸ் இஸ்மாயில்)







அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு துறை சார்ந்த மகளிர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06.03.2022) சம்மாந்துறை இஸ்லாமிய கற்கை பீடத்தில் நடைபெற்றது.

முன்னணியின் அம்பாறை மாவட்டத் தலைவி ஜீ.றிபா முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.ஐ.எம்.அமீர் பிரதம அதிதியாகவும்,அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் பிரதம ஆலோசகரும், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளருமான எஸ்.எல். ஆதம்பாவா, கலாநிதி எஸ்.எல். றியாஸ் கௌரவ அதிதிகளாகவும்,அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ.உதுமா லெப்பை, முன்னணியின் மாகாண பணிப்பாளர் ஏ.எல்.எம்.இஸ்மாயில், மாவட்ட தலைவர் அதிபர் எம்.ஐ.முகம்மட் றியாஸ், மாவட்ட ஆலோசகர்கள் விசேட அதிதிகளாவும் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை, கல்முனை பிரதேசங்களைச் சேர்ந்த பதவி உயர்வு பெற்றவர்களான கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் ( ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஏ.ஜெலீல், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சம்மாந்துறை பிரயோக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.சபீனா இம்தியாஸ் ஆகியோர்க்கு தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.ஐ.எம்.அமீரினால் நிர்வாகத்தின் ஆளுமை, கல்விக்கான ஆளுமை என்ற விசேட கௌரவங்கள் மகளிர் தினத்தை முன்னிட்டு வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் யூனானி மருத்துவ பீடத்திற்கு இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனைச் சேர்ந்த எம்.ஆர்.பத்திமா நஷ்காவிற்கு நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டியதுடன் பதுறை சார்ந்த பெண்கள் மற்றும் சமூக சேவையாளர்கள் 10பேருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் கலை, கலாச்சார நிகழ்வுகள் நடைபெற்றதுடன், மரணித்த மகளிர்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் இதன் போது மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர் ஐ.எல். ஏ.மஜீத்,டொக்டர் ஐ.எல்.அப்துல் மஜீத், மாவட்ட மகளிர் அமைப்பின் செயலாளர் எம்.ஏ.நஸீரா, மாவட்ட பொருளாளர் கே.எல்.சுபையிர் உட்பட முன்னணியின் மாவட்ட சம்மேளத்தின் பதவி வழி உத்தியோகத்தர்கள், பிரமுகர்கள் மகளீர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு மேலதிக அரச அதிபராக எஸ்.குணபாலன் இடமாற்றம்



(வாஸ் கூஞ்ஞ)

நான்கு வருடங்களாக மன்னார் மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய எஸ்.குணபாலன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு மேலதிக அரச அதிபராக இடம்மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இவ் மாவட்ட செயலகத்தில் இரு அரசாங்க அதிபரின் கடமை காலங்களில் நான்கு வருடங்கள் கடமைபுரிந்து வந்த எஸ்.குணபாலன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு மேலதிக அரசாங்க அதிபராக பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை (03.03.2022) முல்லைத்தீவு மேலதிக அரச அதிபராக கடமையேற்றுள்ள இவர் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபராக கடமையேற்பதற்கு முன் துணுக்காய் மற்றும் ஒட்டுச்சுட்டான் பிரதேசங்களின் பிரதேச செயலாளராக கடமைபுரிந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் மன்னார் மாவட்டத்தில் கடமைபுரிந்த காலங்களில் கொரோனா காலப்பகுதிகளிலும் மன்னாரில் பெரும் வெள்ளம் ஏற்பட்ட இக்கட்டான காலங்களில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருடன் இணைந்து தீவிர செயல்பாட்டில் ஈடுபட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

# 3634 உடல்களுடன் ஓட்டமாவடி மஜ்மா நகரில் ஜனாஸா நல்லடக்கப் பணிகள் நிறைவு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றினால் மரணித்த நபர்களை நல்லடக்கம் செய்து வந்த ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் மரணிக்கும் நபர்களை மார்ச் 5 முதல் எந்தவொரு மையவாடிகளிலும் அடக்கலாம் எனும் சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் படி, ஓட்டமாவடி மஜ்மா நகரில் மேற்கொள்ளப்பட்டு வந்த நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன.

ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியில் 2021 மார்ச் 5 முதல் 2022 மார்ச் 5 வரையான ஒரு வருடத்தில் அங்கு அனைத்து இன மக்களினதும் 3634 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் ஜனாஸா நல்லடக்கப் பணியை எமது பிரதேச சபை மேற்கொள்ள சகல விதங்களிலும் ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசாங்கத்திற்கு நன்றிகளை தெரிவிக்கிறேன் என்று தவிசாளர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் மருத்துவக் கல்லூரிகளில் துறைசார் டிப்ளோமா கற்கைகளுக்கான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

பாகிஸ்தானில் உள்ள மிகப் பிரபல்யமான மருத்துவக் கல்லூரிகளில் இலங்கை மாணவர்கள் துறைசார் டிப்ளோமா கற்கைகளை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில் திட்டத்தை College of Management and Technology (கொம்டெக்) அறிமுகப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் AlRazi Medical Institute மற்றும் Afro Asian Medical Institute ஆகிய மருத்துவக் கல்லூரிகளுடன் கொம்டெக் நிறுவனம் இணைந்து இப்புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஒழுங்குகளை செய்துள்ளது.

ஜீ.சி.ஈ.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் குறைந்தது 02 பாடங்களில் சாதாரண சித்தி பெற்ற மாணவர்களுக்கு பாகிஸ்தானில் உள்ள மேற்படி மருத்துவக் கல்லூரிகளில் இரண்டு வருட கற்கை நெறியான Diploma in Operation Theater Technician, Diploma in Radiography Imaging Technician, Diploma in Medical Laboratory Technician, Diploma in Dispenser, Diploma in Physiotherapy ஆகிய பாட நெறிகளில் ஒன்றைத் தொடர்வதற்காக முழுமையான மற்றும் பகுதியளவான புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இவ்வனைத்து பாடநெறிகளும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

இம்மருத்துவக் கல்லூரிகளில் மேற்படி டிப்ளோமா பாட நெறியொன்றை நிறைவு செய்த பின்னர் ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் அந்நாடுகளில் தொழிவாய்ப்பை பெறுவதற்கும் மேற்படி நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி பாகிஸ்தான் சென்று உயர் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள், புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 0778684242 எனும் வட்ஸப் இலக்கத்திற்கு தங்களது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களை அனுப்பி பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப் படுகிறது.

ஜீ.சி.ஈ.உயர்தர பரீட்சை பெறுபேறுகளுடன் நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் புலமைப்பரிசிலுக்கான மாணவர் தேர்வு இடம் பெறும் எனவும் விரைவில் பாகிஸ்தானிலுள்ள குறித்த மருத்துவக் கல்லூரிகளில் பாட நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25 வது போதுப் பட்டமளிப்பு விழா




இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25வது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 12.03.2022 மற்றும் 13.03.2022 ஆகிய திகதிகளில் பல்கலைக்கழக நல்லையா ஞாபகார்த்த கேட்போர் கூட மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்களது ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இப் பட்டமளிப்பு விழாவானது பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராஜா தலைமையில் நடைபெறுவதுடன் இவ்விழாவின் 1ஆம் நாள் அமர்வுகளில் விசேட அதிதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சந்தன பீ.உடவத்த அவர்களும், 2ஆம் நாள் அமர்வுகளில் விசேட அதிதியாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.கபில சீ.கே.பெரேரா அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் விசேட உரையினையும் ஆற்றவுள்ளனர்.

இவ்விழாவில் காலஞ்சென்ற முன்னாள் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் அவர்களுக்கு கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டமும், சீனித்தம்பி கோபாலசிங்கம் அவர்களுக்கு கௌரவ இலக்கிய முதுமானிப் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் முதலாவது நாள் இடம் பெறவுள்ள பட்டமளிப்பு நிகழ்வுகள் மூன்று அமர்வுகளாக இடம்பெறவுள்ளதுடன், இதன்போது 883 மாணவர்களும், இரண்டாம் நாள் இடம்பெறவுள்ள மூன்று அமர்வுகளின்போது 1075 மாணவர்களுமாக முதுமானி, இளமானிப் பரீட்சைகளில் சித்திபெற்ற 1,958 மாணவர்கள் தங்களுக்கான பட்டங்களை இதன்போது பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

# ஆத்மஞானபீடத்தில் உலக சேமத்திற்கான மகாயாகம்






**(காரைதீவு சகா)**

உலக சேமத்திற்கான மகா யாகமும் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் தெய்வீகதிருப்பாதங்களுக்கு அபிசேக ஆராதனையும் மண்டூர் பாலமுனை ஸ்ரீ ஆத்ம ஞான பீடத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி புண்ணியரெத்தினம் சுவாமிகள் ஆஸ்தான குருவாக வந்து இதனை நிகழ்த்தி வைத்தார்.

அத்துடன் மகாலிங்க வடிவான ஈசனுக்கு அபிசேக ஆராதனைகளும் இடம் பெற்றன.

நாதஸ்வர மேதாளங்கள் சகிதம் மிகவும் பக்திபூர்வமாக விடியவிடிய இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டு மகாயோகியின் பாதங்களுக்கு பாதநமஸ்காரம் செய்தனர்.

அனைத்து பக்தர்களுக்கும் ஆத்மஞான பீட காவிநிற வஸ்திரம் வழங்கப்பட்டு தமிழில் ஆராதனை நிகழ்த்தப்பட்டது.

# யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்கள் சேதம்



**(குகதர்சன்)**

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள குகனேசபுரம் பகுதிக்கு இன்று அதிகாலை காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்கள், தோட்டப்பயிர்கள் என்பவற்றை சேதப்படுத்தியுள்ளது.


இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதுடன், பெறுமதியான தென்னை, மா, பலா போன்ற மரங்களும் காய்கறிப் பயிர்களும், மரவள்ளி தோட்டம் சேதப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் அதிகமான வளர்ந்த தென்னைகள் மற்றும் தோட்டப்பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், சுற்றுவேலியும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் வதியும் மக்கள் உயிரச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்திற்குள் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இதுதொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் யானை வேலி அமைத்து தருவதுடன், எங்களது உயிர்களையும், பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# அம்பாறையில் ஈவன் ஏ ஹாடி அவர்களின் 65 ஆவது சிரார்த்த தினம்




**( அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஸ்தாபகரும் கனடாவைச் சேர்ந்த பேராசிரியருமான ஈவன் ஏ ஹாடி அவர்களின் 65 ஆவது சிரார்த்த தினம் அண்மையில் அம்பாறையில் விமரிசையாக இடம்பெற்றது.

பேராசிரியர் ஈவன் ஏ ஹாடி ஐக்கிய நாடுகள் சபை மூலம் இலங்கையில் வரண்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக கனடாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டு கல்லோயா திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு காரணமாகவிருந்த பிரதானி யாவார்.

1963 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொழில்நுட்ப அறிவை மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் வழங்குவதற்காக அம்பாறையில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை நிறுவினார். இதனால் இப்பிரதேச மாணவர்களாலும் விவசாயிகளாலும் பெரிதும் போற்றி மதிக்கப்பட்டார்.

அவர் இறந்ததும் அம்பாறை தொழில்நுட்பக்கல்லூரி வளாகத்தில் தனது புதவுடலை அடக்கம் செய்யுமாறு பணித்திருந்தார். அதனால் அன்னாரை நினைவு கூரும் வகையிலும் கௌரவப்படுத்தும் வகையிலும் இத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஹாடி தொழில்நுட்ப கல்லூரி என்று பெயர் சூட்டப்பட்டதுடன் , இன்று அது ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனமாக புதிய பரிணாமம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் அதிபர் , விரிவுரையாளர்கள் , கல்விசாரா உத்தியோஸ்தர்கள் , தற்போது கல்வி பயிலும் மாணவர்கள் , பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு:
# ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதம அதிதி

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் இருபத்தைந்தாவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு அல் ஹிதாயா மகாவித்தியாலய பஹார்தீன் கேட்போர்கூடத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்த மாநாட்டில், முதல் அமர்வில் பிரதம அதிதியாக ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்து கொள்ளவுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், இந்திய லோக்சபா பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பிப்பதோடு,

கலாநிதி எம்.சி. ரஸ்மின், 'முஸ்லிம்களும் ஊடக எதிர்காலமும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார்.

இரண்டாவது அமர்வில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும். புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் மற்றும் யாப்புத் திருத்தம் பற்றிய செயற்குழு பிரேரணையும் இதன்போது ஆராயப்படும்.

சுகாதார வழிமுறைகளை முழுமையாகப் பேணி இம்மாநாடு நடாத்தப்படவிருப்பதால் அங்கத்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இம்மாநாடு நடைபெறவிருப்பதாக போரத்தின் செயலாளர் என்.ஏ.எம்.ஸாதிக் சிஹான் தெரிவித்தார்.

சகல அங்கத்தவர்களுக்கும் மாநாடு சம்பந்தமாக கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதவர்கள் சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளரின் 077 311 25 61 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# திருமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்ஸவம்



**(அ . அச்சுதன்)**

தெட்ஷணகைலாசம் என்னும் திருக்கோணமலையில் அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்ஸவம் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பிலவ வருடம் மாசி மாதம் 24ம் நாள் (08.03.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு துவஜாரோகணம் எனும் கொடியேற்றம் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா இடம்பெற்று 10ம் நாள் 1%.03.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவத் திருவிழாவும், 18.03.2022 வெள்ளிக்கிழமை உதயத்தில் தீர்த்தோற்ஸவமும் இடம்பெற்று இரவு துவஜ அவரோகணம் எனும் கொடியிறக்கம் இடம்பெறும். மறுநாள் 19.03.2022 அன்று சனிக்கிழமை பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறும். மஹோற்சவ காலங்களில் தினமும் காலை 5.30 மணிக்கு அபிஷேகம், காலை 7.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, 7.45 க்கு தம்ப பூஜை, 8.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், 3.30 மணிக்கு மூலஸ்தான பூஜை, மாலை 4.15 க்கு தம்ப பூஜை, மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று 6.00 மணிக்கு அம்பாள் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பாள் என பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் தெரிவித்தார்.





உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

# குமுக்கனில் காளிமஹாதேவிக்கு வரலாறுகாணாத சண்டிஹோம பெரும்யாகம்!

கிழக்கு மாகாணத்தின் தென்கோடியிலுள்ள குமுக்கன் ஆற்றங்கரை தீரத்தில் அண்மையில் பிரதிஸ்டை செய்யப்பட்ட காளி மஹாதேவிக்கு எட்டுமணிநேர வரலாறுகாணாத மாபெரும் சண்டி ஹோம பெரும்யாகம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இலங்கையை ஆண்ட மன்னர்கள் காளிதேவியை துதித்து வழிபாடு செய்த இடமான 'காளிகா வனம்' என போற்றப்பட்ட குமுக்கன் ஆற்றங்கரையில் இர்ணடரும்யாகம் நடாத்தப்பட்டது.

சித்தர்களின் குரல் அமையத்தின் உலகளாவியதலை



வர் ஸ்ரீ சிவசங்கர் ஜீயின் பாரிய ஏற்பாட்டில் அடர்ந்த வனாந்தரத்தில் அமையப்பெற்ற காளிஅம்பா சிலையின்முன்னால் இம்மாபெரும்யாகம் ஞாயிறன்று நிகழ்த்தப்பட்டது.

இதுவரை உலகில் எங்கும் நடந்திராத அளவுக்கு ஒரு பிரமாண்டமான சண்டிஹோமத்தை யாழ்ப்பாணம் இணுவில் தர்மசாஸ்தா குருகுல வேதவாத்தியார் சிவகாமசதுர்வேத சக்கரவர்த்தி மஹாதேவ சிவஸ்ரீ ஸ்ரீ வத்சாங்க குருக்கள் தலைமையி;லான குருகுல அதிபர் சிவஸ்ரீ மஹாதேவ வாததியார் இணுவில்சாதக சிம்மம் சிவஸ்ரீ சிவபால சர்மா போன்ற வேத பண்டிதர்கள் நிகழ்த்தியமை கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

சித்தர்களின்குரல் சமஸ்தான் ஆஸ்தான சிவாச்சாரியர் உலகப்புகழ்பெற்ற பிரபல வேதசாஸ்திர விற்பன்னர் ஸ்ரீ வத்சன் குருக்கள் தலைமையில் ஸ்ரீ சிவசங்கர் ஜீ முன்னிலையில் சித்தர்களின் குரல் அமைய தலைவர் ஆதித்தன் உபதலைவர் மனோகரன் சிவாயநம மகேஸ்வரன் ஜீ மற்றும் சித்தர் தொண்டர்கள் காலை 9மணிமுதல் மாலை 5மணிவரை எட்டுமணிநேரம் தொடர்ச்சியாக யாகத்தை நிகழ்த்தினர்.

அசுரர்களை அழித்து தர்மத்தைக்காக்க பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கும் ஆதிபராசசக்திதேவியின் வாவம்தான் சண்டிமஹாதேவி. அங்கு யாகம் நடைபெற்ற அதேவேளை சமகாலத்தில் காளிமஹாதேவிக்கு அபிஸேகமும் நடைபெற்றது.

அண்டசராசரத்தை ஒட்டுமொத்த இயக்கமாக கட்டுப்படுத்தும் 13மாபெரும் சக்திகளை திருப்பதிப்படுத்திப் பூஜிப்பதற்காக சண்டிஹோமத்தில் பஞ்சகவ்வியம் சந்தனாதிதைலம் பஞ்சாமிர்தம் மஞ்சள்தூள் நெய் கரும்பு பன்னீர் தேன் உள்ளிட்ட 13அபிஷேகத்திரவியங்கள் ஆகுதியாக்கப்பட்டன.

கலியுக நாதஸ்வர இசையுலக சக்கரவர்த்தி கோவிந்தசாமி இரட்ணகுமார் குழுவினரின் நாதஸ்வர மேளதாள வாத்தியம் அடர்ந்தகானகத்தை இசைமழையில் நனையவைத்தது.

வெட்டிவேரில் உருவாக்கப்பட்ட 64வகை உபசாரங்கள் அங்கு படைக்கப்பட்டன. கானகத்தில் இனிமையான வாசனை கமழ்ந்தது.

இறுதியாக வஸ்திரதானம் வழங்கப்பட்டதோடு மற்றும் வனத்திலுள்ள அத்தனை தேவதைகளுக்கும் வனபோஜனம் வழங்கப்பட்டது.

இறுதியாக சித்தர்களின் குரல் அமையத்தின் உலகளாவியதலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜீயின்காலில் வீழ்ந்து அனைவரும் ஆசீர்வாதம் பெற்றதும் அவர் சிவனுக்குரிய உருத்திராட்சமாலை வழங்கினார்.

## சண்டி ஹோமம் என்றால் என்ன?

அசுரர்களை அழித்து தர்மத்தை காக்க பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கும் ஆதி சக்தி தேவியின் வடிவம் தான் சண்டிதேவி. சண்டி ஹோமம் என்பது ஒரு சாதாரண ஹோமம் இல்லை. இது ஒரு மாபெரும் சக்தி மாற்றம். முறையாக 9 வேத விற்பன்னர்களை கொண்டு செய்யப்படுகின்ற இந்த ஹோமத்தில் மந்திரங்களை தொடர்ந்து கோஷமிட்டு சொல்ல வேண்டும். அப்படி சொல்லும் போது ஒரு மாபெரும் சக்தி மாற்றம் அந்த பூமியில் இயல்பாக உண்டாகும். அந்த மண்ணே ஒரு மாபெரும் சக்தி பீடமாக உருவாகும் என சொல்கிறார் மார்க்கண்டேய மகரிஷி. இந்த மந்திரங்கள் 13 அத்தியாயங்களை கொண்டதாக இருக்கும்.13 அத்தியாயத்தில் வழிபாடு நிறைவு செய்யபடும்.

13 சக்திகளும் இணைந்த சக்திதான் மஹா சண்டிகா பரமேஸ்வரி. இந்த யாகங்கள் முறத்தினாலே (சுழகு) செய்யப்படும். மார்கண்டேயரால் சொல்லப்பட்ட 700 மந்திரங்களினால் இந்த யாகம் நடைபெறும்.

மிக முக்கியமாக சண்டி ஹோமத்தில் 13 தேவதைகளுக்கும் ப்ரியமான இந்த 13 திரவியங்களே பிரதானமாக இடப்பட வேண்டும். அவற்றை இடுவதால் என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என சொல்லபடு



கிறது.ஹோமம் நடைபெறும் போது போடப்படும் திரவியங்களின் விபரமும் அதனால் கிடைக்கும் பலன்களும் நூலில் சொல்லப்பட்ட ஒழுங்கிலேயே தரப்பட்டுள்ளன.

(1) விளாம்பழம் (சத்ரு நாசம் மற்றும் நினைத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி)

(2) முழு தேங்காய் (அஷ்ட ஐஸ்வர்யங்களுடன் குபேர வாழ்வும் எடுத்த அனைத்து காரியங்களும் வெற்றியும் பதவி உயர்வும்)

(3) தாமரை பூ 10 துரிஞ்சி நாரத்தை (சந்ததி விருத்தியும் புத்ர விருத்தியும் வாழையடி வாழயாக தொடரும்)

(4) பாக்கு பழம் (அனைத்து விதமான நோய்களிலும் இருந்து விடுதலை அனைத்து விதமான நோய் தாக்கங்களில் இருந்தும் விடுதலை)

(5) கொய்யா பழம் (வாக்குப் பலிதம்இ ஞானானந்தகரம் வித்தை கலைகளில் விருத்தி என்பன ஏற்படும்)



(6) அகில் 10 சந்தன கட்டை (ராஜ வசீகரணம் சுய வசீகரணம்

பேரழகு என்பன ஏற்படும்)

(7) நீத்து பூசணிக்காய் (எப்பேற்பட்ட திருஷ்டி தோஷங்களும் பில்லி ஏவல் போன்ற கொடிய தாக்கங்களும் தவிடு பொடியாகும்)

(8) செங்கரும்பு (சர்வ வஸ்யம்)

(9) தேவதாரம் 10 கருங்காலி (சோகநாசம் மனதில் உள்ள சோகங்கள் சஞ்சலங்கள் கவலைகள் தீரும்)

(10) மாம்பழம் (நினைத்த காரியம் ஜெயம்)

(11) மாதுளம்பழம் (மனதில் நினைக்கின்ற தூய பிரார்த்தனைகள் அனைத்தும் சித்தியாகும்)

(12) வில்வம்பலம் (அனைத்துவிதமான பயங்களில் இருந்தும் விடுதலை மன தைரியம் உண்டாகும்)

(13) செவ்வாழை (ஞான விருத்தி)

ஆதிபராசக்தியின் இந்த 13 சக்திகள் தான் அண்ட சராசரத்தின் ஒட்டுமொத்த இயக்கமாக உள்ளது. இந்த சக்திகளை திருப்திப்படுத்தி பூஜிப்பதே சண்டி ஹோமத்தின் ஒரே நோக்கம்...

(1) மஹாகாளி சண்டிகை:
எமபயம் நோய் ஆகியன நீக்கி நீண்ட ஆயுள் அருள்பவள்.

(2) மஹாலக்ஷ்மி சண்டிகை:
பொருளாதாரக் கஷ்டங்கள் கடன் தொல்லைகள் நீக்கி செல்வ வளம் அருள்பவள்.

(3) சங்கரி சண்டிகை:
மனக்குழப்பங்கள் மன நோய்கள் அனைத்தையும் நீக்கி அமைதி அருள்பவள்.

(4) ஜெயதுர்க்கை சண்டிகை:
தோல்விகளை நீக்கி வெற்றி தருபவள்.

(5) மஹா சரஸ்வதி சண்டிகை:
ஞாபக மறதி அறியாமையை நீக்கி நல்லறிவு தருபவள்.

6) பத்மாவதி சண்டிகை:
பயம் நீக்கி துணிவைத் தருபவள்.

(7) ராஜமாதங்கி சண்டிகை:
பதவி உயர்வும் செழிப்பும் அருள்பவள் .

(8) பவானி சண்டிகை:
சகல பாவங்களையும் நீக்குபவள்.

(9) அர்தாம்பிகை சண்டிகை:
கணவன் மனைவிக்குள் ஒற்றுமையைத் தருபவள்.

(10) காமேஸ்வரி சண்டிகை:
குழந்தை பாக்கியம் அருள்பவள்.

(11) புவனேஸ்வரி சண்டிகை:
இயற்கை சீற்றங்களைப் போக்குபவள்.

(12) அக்னி துர்கை சண்டிகை:
எதிரிகளால் ஏற்படும் துன்பங்களைத் தீர்ப்பவள்.

(13) சிவாதாரிகை சண்டிகை:
பிறவா நிலையையும் முக்தியையும் அருள்பவள்.

64உபசாரங்களுடனும் சமகாலத்தில் மூலமந்திர ஜெபம் 13அத்தியாயங்களும் பாராயணம் ஹோமம் தர்ப்பணம் நியாசம் பிரமாண்டமாக அபிசேனம் என நடாத்தப்பட்டது இலங்கையில் இதுவே முதல்தடவை எனலாம். அதுவும் நடு காட்டுக்குள் இம்மாபெரும் யாகத்தை நடாத்துவதென்பது சாமானியமானதொன்றல்ல.

இந்த சண்டிஹோம யாகம் செய்தனின் புகழ் இப்பூமியில் 64வருடங்கள் நிலைத்திருக்கும் என தேவிபாகவதம் கூறுகிறது. இந்த யாகத்தால் அனைத்து மக்களும் பசிபட்டினி நீங்கி நோயற்றவாழ்வுடனும் குறைவற்ற செல்வத்துடனும் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று வாழ்வார்கள் என்பது நம்பிக்கை.

அப்படிப்பட்ட மாபெரும் சண்டிஹோமம் இலங்கையில் நடைபெறுவது இதுவே முதல்தடவையாகும் என ஸ்ரீ சிவசங்கர் ஜீ குறிப்பிடுகிறார். இக்ஹோமத்தால் நாடும் மக்களும் வளம்பெறவேண்டும்.

# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பணிப்புரையின் பேரில், புதிதாக நியமனம் பெற்ற விரிவுரையாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை

(றம்ஸீன முஹம்மட்)

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு, ஜனாதிபதியின் திட்டத்தை யதார்த்தமாக்கும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களுடைய எண்ணக் கருவில் உருவான, பல்கலைகழகத்தில் புதிதாக நியமனம் பெற்ற விரிவுரையாளர்களின் கல்வி தரத்தை உயர்த்துவதற்கான பயிற்சி பட்டறை.





இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு ஊழியர்கள் மேம்பாட்டு மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஏ. ஜெஃபர் ஆதம்பாவா தலைமையில் நடைபெற்றது.

மேலும் இந்நிகழ்வின் பயிற்சி பட்டறையின் வளவாளர்ராக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் கலந்துகொண்டு விரிவுரையின் போது இவ்விடயம் குறித்து உரையாடியபோது. நிகழ்காலத்தில் இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய விரிவுரையாளர்கள் பணி தொடர்பான, புதிய நோக்கம் , தேவையும் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மிகவும் பொறுமையாக விருத்தி செய்ய வேண்டிய சமூக பிரிவினராக விரிவுரையாளர்கள் இனம் காணப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

விரிவுரையாளர்கள் மிக விரிவான பாடத்திட்டங்களை தயாரித்து தொடர்ச்சியாக அவற்றை மீட்டு கொண்டிருத்தல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களில் போதியளவு அறிவை வழங்குதல் மற்றும் போதுமானதன்று, அத்தகைய அறிவை நடைமுறை வாழ்வில் பிரயோகிப்பதற்கான தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

சமூக இலக்குகள், சமூக தொழிற்பாடுகள், சமூக அசைவியக்கம், சமூக முன்னேற்றம் போன்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இயங்கியல் நடைமுறைகளில் மையச் சக்கரமாக தொழிற்படும் வினைத்திறனையும், விளைதிறனையும் தீர்மானிப்பவர்கள் விரிவுரையாளர்களே.

விரிவுரையாளர்கள் என்ற நோக்கில் மாத்திரமின்றி சமூக மாற்றங்களை வழிப்படுத்துபவர்கள், விசைப்படுத்துபவர்கள், என்ற முறையிலும் முக்கியமானவர்கள்.

பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் இயல்பாக உயரிய சமூகத் தொடர்புகளை பெறுவதால், உயரிய சமூக அங்கீகாரத்தைப் பெறுகின்றன. பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கான சமூக அந்தஸ்து ஒப்பீட்டு ரீதியில் உயர்வானது என்றும் குறிப்பிட்டார். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணியாற்றுவதற்கான மொழியறிவு, விடய உள்ளடக்கம், கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் சமூக திறன்கள் என்பன போதுமானதாகயில்லை என்று உணரப்பட்டுள்ளது. புத்துணர்ச்சி நோக்கும், தொடர்கல்வி ஊக்கமும், பன்மொழித் தேர்ச்சியும், தகவல் தொழில்நுட்ப தகமையும், எங்கும் எப்போதும் பணியாற்றும் மனப்பாங்கும் கொண்டவர்களே விரிவுரையாளராக பணியாற்ற முடியும் என்ற புதிய எண்ணக்கரு வலுப்பெற்றுள்ளது. இவ்வாறு செய்யுமிடத்து விரிவுரையாளர்கள் மாறிவரும் வகிபங்கினை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும், சமூக பொறுப்புணர்வுடனும் நிறைவேற்ற முடியும்.

இவை தொடர்பான ஆய்வுகளும் எதிர்காலத்தில் ஊக்குவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

பல்வேறு தலைப்புகளில் துறை சார்ந்த வளவாளர்ராக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் விரிவுரையின் போது இவ்விடயங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

# ஆரையம்பதியில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினம்





மார்ச் 08ஆந் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு அதன் முதலாவது நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் ஆரையம்பதி சிறுவர் பூங்காவிற்கு அருகில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வானது மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் திருமதி. ந.சத்தியானந்தி அவர்களின் தலைமையில் (06) திகதி பி.ப.03.30 மணிக்கு ஆரம்பமானதுடன் இதில் குடும்ப வன்முறை தொடர்பான வீதியோர நாடகம் சூரியா கலாச்சார குழுவினரால் அளிக்கை செய்யப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் உதவி பிரதேசசெயலாளர் திருமதி.வி. லோகினி, கிராமசேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் , ஆரையம்பதி கிழக்கு மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் தினத்தையோட்டி விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் வர்த்தக கண்காட்சியும்









(மட்டு துஷாரா)

மகளிர் தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் வர்த்தக கண்காட்சியும் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையப்பினால் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

''பாராபட்சத்தை உடைத்தெறி, பெண் சமத்துவத்தை மதித்திடு'' எனும் தொணிப்பொருளில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினப் போட்டி நிகழ்வுகள் கடந்த 05, 06 திகதிகளில் இடம்பெற்றது.

இந்தப்போட்டி நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள பிரதேச மட்ட அணிகள் கலந்துகொண்டு எல்லே மற்றும் கயிறு இழுத்தல் உள்ளிட்ட பல போட்டிகளில் கலந்துகொண்டது.

கயிறுழுத்தல் போட்டியில் முதலாவது இடத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகளீர் அணியும் இரண்டாவது இடத்தை கிரான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகளீர் அணியும் பெற்றுக்கொண்டதுடன் எல்லே விளையாட்டில் முதலாவது இடத்தை கிரான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகளீர் அணியும் இரண்டாவது இடத்தை வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகளீர் அணியும் பெற்றுக்கொண்டது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி திருமதி.மயூரி ஜனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகவுக்கு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி சிறிகாந்த் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் அ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவன், விளையாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மடத்தடியில் மகா கணபதி சண்டி கோமம்

(காரைதீவு நிருபர் சகா)

ஈழ வள நாட்டின் தென் கோடியிலே கோயில் கொண்டு அருள் பாலித்து கொண்டிருக்கும் நிந்தவூர், மாட்டுப்பளை அருள் மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை மகா கணபதி மற்றும் சண்டி ஹோமம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வு நேற்று காலை கிரியாதிலகம், கிரியாகால கலாமணி விபுலமணி சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்க களின் தலைமையில் நடைபெற்றது. உதவியாக சிவஸ்ரீ மயுரவதன குருக்கள் செயற்பட்டார்.

ஆலய தலைவர் கி.ஜெயசிறில் மற்றும் நிர்வாக சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கணபதி சண்டி ஹோமம் நேற்றுகாலை 11 மணி அளவில் அபிஷேகம் சகிதம் ஆரம்பமானது,

ஆலய ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் யாகபூஜைகள் இடம்பெற்றன.

யாகத்தில் பல திரவியங்கள் ஆகுதியாக்கப்பட்டன. பக்தர்கள் யாகத்தில் தோன்றிய புகையை நுகர்வதில் ஆர்வம் காட்டினார்கள்.

மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்து பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து கலந்து கொண்டார்கள்.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக, தடை பிசகுகளை நீக்குமுகமாக இது நடாத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# "படைப்பாக்க ஆளுமைகள் நூல் வெளியீடு: பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி பங்கேற்பு





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் பல்துறைப் படைப்பாளி பா.மோகனதாஸ் எழுதிய படைப்பாக்க ஆளுமைகள் ( நேர்காணல்கள் ) எனும் நூல் வெளியீடு திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் சனிக்கிழமை காலை10.00 மணிக்கு இடம்பெற்றது..

கவிஞர். எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையிலான இந்நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஶ்ரீபதி பிரதம அதிதியாகவும் ,திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை உபதவிசாளர் முகமட் நௌபர் சிறப்பு அதிதியாகவும் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வீ.கோணேஸ்வரன் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் வரவேற்புரையினையும் திருகோணமலை பத்திரகாளியம்பாள் ஆலய தேவஸ்தான குரு வேதாகமமாமணி பிரம்மஶ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் ஆசியுரையினையும், முதற்பிரதியினையும் பெற்றார்.

கவிஞர் க.யோகானந்தன் மற்றும் கவிஞையும் ஆசிரியருமான செ.சந்திரகலா ஆகியோர் நூல் நயத்தினையும் ஏற்புரையினை நூலாசிரியரும் நன்றியுரையினை இளம் ஊடகவியலாளர் ஆர்.சமிராவும் ஆற்றினர். இந்நூல், ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிக ஆளுமையாளர்களின் (73) அனுபவங்களை பேசும் முதல் நேர்காணல் நூலாகவும் அவசியமானதொரு புது வரவாகவும் விளங்குகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த நூலாசிரியரை பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி பொன்னாடை போர்த்தி இதன் போது கௌரவித்தார்.இவ் நூல் வெளியீட்டு நிகழ்வில் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள்,சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

## தமிழ் பேசும் மக்களை ஆளும் தகுதியை சிங்களத் தலைவர்கள்

# பேரின ஓரின அடிப்படைவாதத்தால் தாமாக இழந்துவிட்டார்களா?

## 74 வருடகால ஆய்வு தரும் செய்தி

பல்லின மக்கள் வாழும் நாடுகளை ஆளுகின்ற தலைவர்கள் சகல மக்களையும் அரவணைத்து ஆளுகின்ற ஆளுமை,பக்குவத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.மாறாக தமது இனம்சார்ந்த மக்களை மாத்திரம் அரவணைத்து ஏனைய மக்களைப் புறந்தள்ளி ஆளும் போக்குக் காணப்பட்டால் அவர்கள் ஓரினத்தின் தலைவர்களாக மட்டுமே கணிக்கப்படுவர்.

இலங்கையைப் பொறுத்தவரை சுதந்திரத்தின் பின்னர் ஆட்சி செய்த சிங்களத் தலைவர்கள் அனைவரும் %4 சதவீதமான தமது சிங்கள இனத்தவருக்குச் சார்பான ஜனநாயகத்தை அல்லது இனநாயகத்தையே பின்பற்றி ஆட்சி செய்துள்ளனர்.இதனை இலங்கையின் ஜனநாயகம் என்று கூறுவதை விட சிங்கள இனநாயகம் என்றே கூறலாம்.

தேசபிதா என்று கூறப்படும் இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க அவர்கள் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை குடியுரிமைகளைப் பறித்து தமிழர்களுக்கு எதிரானவராகத் தன்னைக் காட்டினார்.மேலும் கல்லோயா சிங்களக் குடியேற்றத்தினையும் திட்டமிட்டு செய்துள்ளார்.

பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் 1956 இல் தனிச்சிங்களச் சட்டம்,195% இல் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டமை,1958 இல் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்புக் கலவரம் என்று அடுக்கடுக்காக இனவாத செயல்கள் நடைபெற்றன.

1965 இல் ஆட்சிக்குவந்த டட்ளி சேனநாயக்கா இனப்பிரச்சினைக்குத் தீர்வாக டட்லி-செல்வா ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து பின்னர் அதனைக் கைவிட்டார்.சிங்களத்தலைவர்களில் மென்மையானவர் என்று பேசப்பட்டவரும் தமிழர்களை ஏமாற்றியுள்ளார்.

19%0 இல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ சிங்களம்,பௌத்தமைய அரசியல்யாப்பினை 19%2 இல் கொணர்ந்தார்.தமிழையும், தமிழர்களையும் முழுமையாகப் புறக்கணிக்கார். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழ் பேசும் மக்கள் சார்பாகச் சமர்ப்பித்த சாதாரணமான ஆறு அம்சக்கோரிக்கையினை நிராகரித்துவிட்டார்.இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர் டி சில்வா தலைமையில்தான் இந்த இனவாத மதவாத அரியல் யாப்பு வரையப்பட்டது. இந்த இடதுசாரிகள் 'ரீமாவின் அரசாங்கத்தில் இணைந்து காணப்பட்டனர்.அந்தவகையில் இடதுசாரிகளும் பதவிக்காக இனவாதிகளிடம் சோரம் போயுள்ளனர்.1956இல் ஒரு மொழி என்றால் இருநாடு என்ற கொல்வின் ஒருமொழியாகச் சிங்களத்தைக் கொணர்ந்து இரு நாடாவதற்கு வழிவகுத்தார்.அதன் பின்னர்தான் தனிநாட்டுக்கோரிக்கை தமிழர் ஐக்கி விடுதலை முன்னணியால் 19%6 இல் வட்டுக் கோட்டைத் தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டு 1977 பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கில் மக்களாணை பெறப்பட்டது.19%2 தயாரிக்கப்பட்ட அடிப்படைவாத அரசியல் யாப்பு தனிநாட்டுக்கோரிக்கைக்கு முக்கிய காரணமாக இருந்தது.

அதன் பின்னர் ஆட்சிப்பீடமேறிய ஆசியாவின் பெருநரியரான ஜே.ஆர். ஜெயவர்தனா தமிழர்களை மோசமாக ஒடுக்குவதற்காக 19%9 இல் கொடுமையான பயங்கரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைக் கொண்டு வந்தார்.இந்த மனித குலத்திற்கு எதிரான சட்டம் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களின் உயிர்களை பலியெடுத்துள்ளது,பழி வாங்கியுள்ளது. இவரது காலத்தில் தான் மோசமான கறுப்பு யூலைக் கலவரம்1983இல் நடைபெற்றது. இதன் போது 3000 தமிழர்கள் சிங்களக் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டார்கள். அரச பாதுகாப்பில் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 52 தமிழ் அரசியல் கைதிகள்,போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.இவர்தான் கண்டிப்பாத யாத்திரை மூலம் சிங்களமக்களைத்தூண்டி பண்டா-செல்வா ஒப்பந்தம் கைவிடப்படுவதிலும் முக்கிய சூத்திரதாரியாக இருந்தார்.

மேலும் ஆர்.பிரேமதாச அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது. இதன் போது சட்டரீதியான படையாலும், சட்ட விரோதமான ஆயுததாரிகளாலும் அப்பாவித் தமிழர்கள் பலர் கொத்தணி கொத்தனியாக வடக்கு - கிழக்கில்



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

கொல்லப்பட்டார்கள். சத்துருக் கொண்டான், கிழக்குப் பல்கலைக்கழக முகாம் படுகொலை, வீரமுனைப்படுகொலை எனப்பல படுகொலைகள் தங்குதடையின்றி நடைபெற்றன.அக்காலத்தில் கொளக்கொட்டியா என்னும் சட்ட விரோத ஆயுததாரிகள் தமிழின அழிப்பில் ஈடுபட்டதாக்க் கூறப்பட்டது.

1994 இல் சந்திரிக்கா அம்மையார் சமாதானத் தேவதையாக தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தார்.அவர் காலத்தில் செம்மணிஅப்படுகொலை, ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலமாகப் பல தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.இவர் காலத்தில் ஒரு சமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 2005 இல் மகிந்த ஜனாதிபதியானார்.இவரது ஆட்சிக்காலத்தில் கொடுமையான யுத்தம் மேற்கொள்ளப்பட்டது. காணாமல் ஆக்கப்படுதல், ஊடகவியலாளர்கள் படுகொலை, ஆட்கடத்தல்கள்,தமிழ்த் தலைவர்கள், புத்திஜீவிகள் படுகொலைகள் பல நடைபெற்றன.இறுதியுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டனர்.சரண்டைந்தவர்கள்,ஒப்படைக்கப்பட்டவர்கள்,கடத்தப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். மொத்தத்தில் காட்டாட்சி நடைபெற்றது,காட்டுச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது.சிங்கள இனநாயகம் சீறிப்பாய்ந்து யுத்தத்தின் பின்னர் 13 பிளசுக்கும் அப்பால் சென்று அரசியல் தீர்வு வழங்கப்போவதாகக் கூறி அப்போதைய ஐ.நா.செயலாளர் பான்கீ மூனிடம் உத்தரவாதம் அளித்தார்.ஆனால் ஏமாற்றமே மிச்சம்.

எதுவும் நடக்கவில்லை. அதன் பின்னர் 2015 இல் ஆட்சிக்கு வந்த மைத்திரி ரணில் கூட்டணி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு மூலம் இனப்பிரச்சினைக்குத்தீர்வு வழங்குவதாகக் கூறியது.ஆனால் அதுவும் மந்தகதியில் நடைபெற்று மைத்திரி மகிந்த கூட்டுச்சதியால் முற்றுப்பெற்றது.ரணிலும் மந்தமான செயற்பாட்டர்களராகவே இயங்கினார். தற்போது ஆட்சியிலுள்ள பொதுசனப் பெரமுன மூலம் 2019 இல் ஆட்சிப்பீடமேறிய கோத்தா,மகிந்த ராஜபக்ச அரசாங்கம் சிங்கள பௌத்த அடிப்படைவாத செயற்பாடுகளை வெளிப்படையாகச் செய்து வருகின்றார்கள். ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி,தொல்லியல் செயலணி,புதிய அரசியல் யாப்புச்செயற்பாடு,சிவில் அதிகாரிகள் நியமனம்,காணிக்

> **2005 இல் மகிந்த ஜனாதிபதியானார். இவரது ஆட்சிக்காலத்தில் கொடுமையான யுத்தம் மேற்கொள்ளப்பட்டது. காணாமல் ஆக்கப்படுதல், ஊடகவியலாளர்கள் படுகொலை, ஆட்கடத்தல்கள்,தமிழ்த் தலைவர்கள், புத்தி ஜீவிகள் படுகொலைகள் பல நடைபெற்றன. இறுதியுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டனர். சரண்டைந்தவர்கள், ஒப்படைக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். மொத்தத்தில் காட்டாட்சி நடைபெற்றது, காட்டுச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது.சிங்கள இனநாயகம் சீறிப்பாய்ந்து யுத்தத்தின் பின்னர் 13 பிளசுக்கும் அப்பால் சென்று அரசியல் தீர்வு வழங்கப்போவதாகக் கூறி அப்போதைய ஐ.நா. செயலாளர் பான்கீ மூனிடம் உத்தரவாதம் அளித்தார். ஆனால் ஏமாற்றமே மிச்சம். எதுவும் நடக்கவில்லை.**

கையாளுகை அனைத்தும் சிங்கள பௌத்தமையச் செயற்பாடுகளாகவே அமைகின்றன. தற்போதைய ஜனாதிபதி கோத்தபாய தான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதை அடிக்கடி கூறிக்கொண்டு அடிப்படை வாதப் போக்கில் செயலாற்றுகின்றார்.

அந்தவகையில் 74 ஆண்டுகளாக எந்தச்சிங்களத் தலைவராலும் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை.தற்போதைய ஜனாதிபதி இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை அபிவிருத்திப்பிரச்சினை மட்டுமே உள்ளதாகக் கூறுகின்றார். சமத்துவ உரிமையற்ற இரண்டாந்தரப் பிரசைகளாக தமிழர்கள் கைகட்டி வாய்பொத்தி வாழ வேண்டும் என்பதே சிங்கள அடிப்படைவாத நிலைப்பாடாகும். இல்லை என்றால் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதே வக்கிர இனவாத சிந்தனையாகும்.இதுவரை 15 இலட்சம் தமிழர்கள் நாட்டுக்கு வெளியே

புலம் பெயர்ந்து வாழ்கின்றார்கள்.சமத்துவ உரிமை இல்லாததாலும்,இன ஒடுக்குமுறையாலுந்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள் என்பதை இன்னும் பேரினவாத ஆட்சியாளர்கள் ஏற்க மறுக்கிறார்கள். சோறும் தண்ணீருந்தான் தமிழர் பிரச்சினை என்பது பேரினவாதிகளின் நையாண்டித்தனமான நிலைப்பாடாகும். எனவே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை சிங்களத் தலைவர்கள் தீர்க்க மாட்டார்கள் என்பதே வரலாற்று உண்மையாகும். இதனால்தான் தமிழர்களை ஆளுந்தகுதியை சிங்களத் தலைகள் தாமாகவே இழந்துள்ளார்கள். எனவேதான் தம்மைத்தாமே ஆளும் உள்ளக சுயநிருணய உரிமையினை தமிழ்மக்கள் இந்தியாவிடமும் சர்வதேசத்திடமும் வாழ்வுரிமை,சுயகௌரவம் அடிப்படையில் கோருகின்றனர்.தமிழ் பேசும் மக்களை வாழவும் விடாமல் தம்மைத்தாமே ஆளவும் விடாமல் சிங்கள ஆட்சியாளர்கள் தடுப்பது நியாயமாகாது.முன்னைய யுகோஸ்லாவியாவின் ஜனாதிபதி மிலோசபிக் சேர்பிய இனவாதியாக இருந்து தமது நாட்டிலுள்ள சிறுபான்மையரான அல்பேனியர் குறேசியர்களை படைகள் மூலமாக இனவழிப்புச் செய்தார்.இறுதியில் ஐக்கிய நாடுகள் சபை மூலமாக படைகள் அனுப்பப்பபட்டன.சிறுபான்மை மக்கள் பாதுகாக்கப்பட்டனர். அவர்களை ஆளத்தெரியாத இனவழிப்புச் செய்த மிலோசபிக் கைதுசெய்யப்பட்டு சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டார்.பின்னர் தடுப்புச்சிறையிலே மிலோசபிக் மரணித்தார்.பல படையதிகாரிகள் ஆயுட்கால சிறைத்ததண்டனை பெற்றார்கள்.சிறுபான்மைத்தேசிய மக்களின் தன்னாட்சி உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டு தனியரசுகள் உருவாக்கப்பட்டன.இவை ஏறத்தாழ எமது நாட்டுப் பிரச்சின்னை போல் அமைந்துள்ளது.முறையான சமஷ்டி மூலமாக அல்லது அதற்கு மேல் சென்று தமிழ்பேசும் மக்களின் சுயநிருணய உரிமை வழங்க வேண்டும் என்பதை இந்தியா உட்பட சர்வதேச சமூகம் இனியாவது உணர்ந்தாக வேண்டும்.%4 ஆண்டுகளாக தமிழர்களை சமத்துவமாக ஆளத்தெரியாத பாரபட்சமான அடிப்படைவாத சிங்கள பௌத்த தலைவர்களுக்கு அதுவே வரலாற்றுப்பாடமாக அமைய முடியும். தமிழர்களை வாழவிடாத அடிப்படைவாத்த் தலைவர்களுக்குரிய செயதியாக தமிழர்கள் தம்மைத்தாமே ஆளவிட வேண்டிய வரலாற்றுத் திருப்பம் உருவாகியள்ளது.பல்லின மக்களை ஆளத்தெரியாத தலைவர்களுக்கு இது பாடமாக அமையவேண்டும்.

# ஒவ்வொரு பெண்ணும் தனது மாதவிடாய் சுழற்சி குறித்து தெரிந்திருக்க வேண்டியது அவசியம்



## கல்முனை பிராந்திய ஆயுள்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளர், வைத்தியர் எம்.ஏ.நபீல் சுபீட்சம் ஊடாக விபரிக்கிறார்

### மாதவிடாய் பிரச்சினை என்றால் என்ன?

பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் வருவது இயற்கையாகும். விஷேடமாக வயதுக்கு வந்த இளம்பெண்கள் சமீப காலங்களாக மாதவிடாய் சுழற்சியில் அதிகப்படியான மாற்றங்களை சந்தித்து வருகிறார்கள் என்றுதான் கூறவேண்டும். அதில் சிலர் சென்ற மாதத்தில் வந்த மாதவிடாய் நாளை நினைவில் வைத்துக்கொள்வது வழக்கம். ஆனால் சிலருக்கு அந்த திகதியை ஞாபகம் வைத்துக்கொள்வது சற்று கடினமான காரியமாகவும் உள்ளது. அதனால் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் உண்டாகிறது என்பது குறித்த குழப்பம் அவர்களுக்கு இருக்கின்றது.

வயதுக்கு வந்த பிறகு உடலில் ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ட்ரான் சுரப்பிகளில் ஏற்படும் மாற்றத்தின் தன்மை கூடிக்குறைவதனால் அவர்கிளின் மாதவிடாய் சுழற்சியில் சிலருக்கு 28 நாட்கள் முடிவில் மாதவிடாய் உண்டாகும். நாட்களின் எண்ணிக்கை அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. சிலருக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை அதிக இரத்தப் போக்கும், விட்டு விட்டு வரும் ஒழுங்கற்ற மாதவிடாய் பிரச்சனைகளும் இருக்கும். இவ்வாறான பிரச்சினைகளை அதிகளவிலான பெண்கள் சந்தித்து வருகிறார்கள். இதில் சிலருக்கு 21 நாட்கள் முதல் 35 நாட்கள் இடைவெளியிலும் உண்டாகக்கூடும்.

### மாதவிடாய் முன் அறிகுறி (Pre Menstrual Syndrome) என்றால் என்ன?

ஒவ்வொரு பெண்ணிற்கும் தனது மாதவிடாய் சுழற்சி குறித்து தெரிந்திருக்க வேண்டியது அவசியம். புதிய கர்ப்பத்தடை முயற்சி மேற்கொள்ளுதல் அல்லது வேறு சில காரணத்தினால் கூட மாதவிடாய் சுழற்சியில் மாறுபாடு தோன்றலாம். ஆனால் அவர்களுக்கு மாதவிடாய் உண்டாகப் போகிறது என்பதை உணர்த்த உடலில் சில அறிகுறிகள் தோன்றும். அதனை வைத்து அடுத்த சில தினங்களில் மாதவிடாய் நெருங்குவதை அறிந்து கொள்வார்கள். நாட்கள் வருவதற்கு முன்பும், வந்த பின்பும் பலவிதமான உபாதைகளையும் எதிர்நோக்குகின்றனர்.

இதில் முக்கியமானது Pre Menstrual Syndrome எனப்படும் மாதவிடாய் நோயின் அறிகுறியாகும். மாதவிடாய் நோயின் அறிகுறிகள் என்பது ஒரு பெண்ணின் மாதவிடாய்க் காலத்தில் கருப்பை சுழற்சியின் அண்டவிடுப்பு (Ovulation) மற்றும் மாதவிடாய்க் கிடையிலான லூடியல் கட்டத்தில் (Luteal phasal) மாதவிடாய் சுழற்சியின் கடைசி % - 10 நாட்களில் இனப்பெருக்க ஹோர்மோன்களின் அதிகரித்த உணர்திறன் காரணமாக ஏற்படும்.

### உடல் உள ரீதியான அறிகுறிகள் என்றால் என்ன?

இரத்தப்போக்குத் தொடங்கியவுடன் மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் முடிவடைந்து விடுகின்றன. இதற்கான அறிகுறிகள் பெரும்பாலும் பெண்களுக்குப் பெண்கள் வேறுபடுகின்றன. உலகளவில் 80 சதவீதமான பெண்கள் மாதவிடாய் காலத்தின்போது அதன் முன் அறிகுறிகளை உணர்வதாக தெரிவிக்கின்றனர். மாதவிடாய் நிறுத்த நிலையில் உள்ள பெண்களில் 20 முதல் 30 சதவீதமானவர்கள் இதனை எதிர்கொள்கின்றனர். Pre Menstrual Syndrome எனப்படும் இவ் அறிகுறிகளுக்கான காரணம் இன்னும் சரிவர நிறுவப்படாத போதிலும் உடலில் ovulation எனப்படும் கருமுட்டை வெளியாகும் செயற்பாட்டின் பின்னர் ஏற்படும் ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ட்டிரோன் ஹோர்மோன்களின் மாறுதல்களாலும், நரம்பு சமிக்ஞை கடத்திகளான செரோடோனின் (Seratonin), (Endophin), (Aminobutric acid) ஆகியவற்றின் அளவு குறைவதாலும்; இவை ஏற்படலாம்.

### இதற்கான காரணங்கள் என்ன?

ஹார்மோன் ஏற்றத்தாழ்வு, அதிக எடை அல்லது எடை குறைவாக இருப்பது மற்றும் உடல் உழைப்பு தேவைப்படாத வாழ்க்கைமுறை ஆகியவை பெண்களுக்கு ஒழுங்கற்ற மாதவிடாய் காலங்களைக் கொண்டிருப்பதற்கான முக்கிய காரணங்களாக அமைகின்றன. மேலும், முறையற்ற உணவுப்பழக்கம், மனஅழுத்தம் நிறைந்த வாழ்க்கைமுறை, போதிய உடற்பயிற்சியின்மை, தூக்கமின்மை, Pre Menstrual Syndrome 200 க்கு மேற்பட்ட உடல் மற்றும் உள ரீதியான வெவ்வேறு காரணங்களையும் குறிப்பிடலாம்.

### இதன் அறிகுறிகள் என்ன?

உடல் ரீதியாக முகப்பரு, மார்பகங்களில் வலி, உடல் எடை அதிகரிப்பு, தலையிடி, உடல் அல்லது மூட்டு வலி, வயிறூதல், களைப்பு, மலக்கட்டு, வாய்ப்புண் போன்றவையும் உள ரீதியான பதட்டம், கோபம், தனிமையுணர்வு, மனஅழுத்தம், எரிச்சலான உணர்வு, உணவில் அதீத விருப்பம், மனச்சோர்வு, அழுகையுணர்வு போன்றவையும் அதன் அறிகுறிகளாக அதிகளவில் உணரப்படுகின்றன.



### இப்பிரச்சினையில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகள் என்ன?

ஆரோக்கியமான உணவுப்பழக்கம்: ஒரே தடவையில் அதிகமாக உண்பதைவிட அடிக்கடி அளவாக சாப்பிடுவது நல்லது. மாதவிலக்கு ஏற்படுவதற்கு முன்னர் அதிக இனிப்பு, அதிக உப்பு, தேனீர், பால்தேனீர், குளிர்பானங்கள், கொழுப்புணவுகள் ஆகியவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிக்கலான காபோஹைட்ரேட்டுகளைக் கொண்ட உணவுகள் மனநிலைக் கோளாறுகளைக் குறைத்து, பி.எம்.எஸ் ஏற்படும் போது அதீத பசியைக் கட்டுப்படுத்தும்.

அதிகளவான கல்சியம் விற்றமின் ஈ மற்றும் அயன் நார்ச்சத்து நிறைந்த பச்சைக் காய்கறிகள், பழங்கள், கொட்டைப் பருப்புகள், சிறுதானியங்கள், பால் பொருட்கள், சாளமீன் போன்ற மீன்களை உண்ண வேண்டும்.

காய்கறிகள்: வெண்டிக்காய், வெள்ளைப்பூண்டு, கோவா, பூக்கோவா, பசளி, கீரைவகை, வாழைத்தண்டு, கரட், பீற்றூட் போன்றவற்றை எடுக்கவேண்டும்.

பழங்கள்: அத்திப்பழம், மாதுளை, ஆனக்கொய்யா, பேரீத்தம்பழம், கொய்யாப்பழம், ஒரேஞ், பப்பாசி, அப்பிள் போன்ற பழவகைகளை எடுக்கவேண்டும். மேலும், பாதாம், குரக்கன், வரகு, திணை, எள்ளு, பொட்டுக்கடலை, முழுக்கோதுமை, (Pro biotics) புரோபயோட்டிக்ஸ் எனப்படும் பழஞ்சோறுநீர், மோர், யோகட் போன்ற புளித்த உணவுகளை உட கொள்வதன் மூலம் இதிலிருந்து மீள வழிவகுக்கும்.

முறையான உடற்பயிற்சி: தினமும் சுமார் 30 நிமிடமாவது உடற்பயிற்சி செய்வதை வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும். அது நடைபயிற்சியாகவோ அல்லது நடனமாகவோ அல்லது மிதி வண்டி ஓடுதல் அல்லது நீச்சல் போன்ற ஏதாவது ஒரு செயற்பாட்டில் ஈடுபடலாம். உடற்பயிற்சியின் போது, மூளை இயற்கையாகவே எண்டோர்பின்ஸ் என்ற வேதிப்பொருளை வெளியிடுகிறது. இவை அமைதியான மற்றும் மகிழ்ச்சியான மனநிலையை பேணுவதிலும், மனநிலை மாற்றங்களைத் தூண்டி ஹோர்மோன்களின் செயற்பாட்டை கட்டுப்படுத்துவதிலும் உதவுகின்றது.

இதில் மிகச்சிறந்த உடற்பயிற்சி யோகா பயிற்சியாகும். யோகா பயிற்சியின் மூலம் உடல், மற்றும் மனதை ஒரு நிலைப்படுத்தி அதன் மூலம் பி.எம்.எஸ் அறிகுறிகளை இல்லாமல் செய்கிறது. அதாவது, கலாசனம், பாலாசனம், சர்வாங்காசனம், சூரிய நமஸ்காரம், சுப்த பதகோனாசனம், புஜங்காசனம் போன்ற யோகப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமும் அதன் தாக்கத்திலிருந்து விடுபடலாம்.


பிரணாயாமம்: மிகவும் எளிய பயன்மிகு பிரணாயாமமாக நாடிசுத்தி கருதப்படுகின்றது. நாடிசுத்தி மூலம் உடலிலுள்ள காபனிரொக்சைட் பெருமளவில் வெளியேற்றப்பட்டு, அதிகளவான ஒக்ஸிஜன் உள்ளெடுக்கப்படுவதன் மூலம் ஹீமோகுளோபினின் அளவு அதிகரிக்கப்படுகின்றது. இது உடலின் சமநிலையைப் பேணி மனஅழுத்தத்தைக் குறைக்கிறது.

தியானம்: தினமும் குறைந்தது பத்து நிமிடமாவது தியானம் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மூளையை புத்துணர்ச்சியடையச் செய்து உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது. மேலும் மனஅழுத்த ஹோர்மோனான கோர்டிசோலை கட்டுப்படுத்தி உடலில் புத்துணர்ச்சியையும், மனதில் மகிழ்ச்சியையும் உண்டாக்குகிறது.

மகிழ்ச்சியான சூழல்: பெண்கள் தமக்கு பிடித்த விடயங்களில் குறிப்பிட்ட நேரத்தை செலவழிப்பதன் மூலமும், குடும்ப அங்கத்தவர்களின் புரிந்துணர்வான நடத்தையின் மூலமும் உள ரீதியான உபாதைகளிலிருந்து கணிசமான அளவு விடுபடுகின்றனர்.

### இது தொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

ஒரு பெண்ணின் மாதவிடாய்க் காலத்தில் கருப்பை சுழற்சியின் அண்டவிடுப்பு (Ovulation) மற்றும் மாதவிடாய்க்கிடையிலான லூடியல் கட்டத்தில் மாதவிடாய் சுழற்சியின் கடைசி 7 - 10 நாட்களில் இனப்பெருக்க ஹோர்மோன்களின் அதிகரித்த உணர்திறன் காரணமாக ஏற்படுகின்றது. இது ஒரு நோயல்ல. நோயாக மாறாமல் இருப்பது உங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எம் உடலும் மனமும் இயங்கும் முறையை நாம் புரிந்துகொண்டால் எல்லாம் நலமே!






நேர்காணல் :-
பைஷல் இஸ்மாயில்

# சிறந்த விவசாயிகளுக்கு விருது வழங்கும் விழா







**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாரை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்தவிவசாயிகளுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்று வருகிறது.

அக்கரைப்பற்று விவசாய வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கான விருது வழங்கி பரிசு வழங்கி பாராட்டு விழா நேற்று (7)அக்கரைப்பற்று காரியாலயத்தில் நடைபெற்றது .

வலய உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் தலைமையில் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

அம்பாரை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ஜி. திசாநாயக்க கலந்து கொண்டு இந்த விருதுகளையும் பணப் பரிசில்களை சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது விவசாய போதனாசிரியர் திருமதி சசிகலா ரகுநந்தன் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தார்கள் .

# சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெற்ற சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை!!





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறையினர் வழங்கும் சத் குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை நேற்று (07) திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறைத் தலைவர் கலாநிதி. நிர்மலேஸ்வரி பிரசாந்த் தலைமையில் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி.புளோரன்ஸ் பாரதி கென்னடி கலந்துகொண்டிருந்த நிகழ்விற்கு ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி பிரபு பிரேமானந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பித்திருந்தார்.

அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில், வரவேற்புரை, மங்கள ஆராத்தி, ஆசியுரை, வாழ்த்துரை தலைமையுரை என்பன இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தப்பட்டு, பஞ்சரத்தின ஆராதனை இடம்பெற்றதனைத் தொடர்ந்து இசை ஆராதனையுடன் நிகழ்வு இனிதே நிறைவடைந்துள்ளது.

இந்நிகழ்வுகளில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் விரிவுரையாளர்கள், கலைஞர்கள் மற்றும் மாணவர்கள் என பெருமளவிலானோர் பங்குபற்றியிருந்தனர்.

# பெண்களின் பங்களிப்பு நம் அனைவருக்குமான தைரியமாகும் என பிரதமர் மகிந்த ராஜபக்ச

**(வாஸ் கூஞ்ஞ)**

கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் ஏற்பட்ட பல்வேறு சிரமங்களை சமாளிப்பதற்கு தொலைநோக்கு சிந்தனையுடன்இ சிக்கனமாகவும் பொறுமையாகவும் செயற்படும் பெண்கள் நாட்டில் காணப்படும் சவால்களை வெற்றி கொள்வதற்கு பெற்றுக் கொடுக்கும் சிறந்த பங்களிப்பு நம் அனைவருக்குமான தைரியமாகும் என பிரதமர் மகிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார்.



ஒரு தாயாக, மகளாக, சகோதரியாக மற்றும் பாட்டியாக ஒட்டுமொத்த சமுதாயத்தையும் வழிநடத்தும் துணிச்சலான பெண்களின் அர்ப்பணிப்பை நினைவுகூரும் சர்வதேச மகளிர் தினத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை பகிர்ந்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு நிலையான சமுதாயத்திற்காக தன் வாழ்நாள் முழுவதும் கருணைஇ ஆளுமை ஆகியவற்றைப் பகிரும் ஒரு பெண்ணின் பெருமையை ஒரு நாளுக்கு மட்டும் வரையறுக்க முடியாது.

மனித இனத்தை மாற்றிய அனைத்து தீர்க்கதரிசிகளின் பிறப்பு முதல்இ மனித இருப்பை அடையும் வரை அனைத்திற்கும் பெண்தான் காரணம் என்பது இரகசியமல்ல. இதனால்தான், பிரபல ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கோர்க்கி அவர்கள், சூரிய ஒளி மற்றும் தாய்ப்பாலில் இருந்தே உலகம் படைக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வீரப் பெண் தலைமுறையின் வரலாற்றை பின்பற்றி இலங்கைப் பெண்கள் இன்று சமூகப் பொறுப்புடன் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர். இந்த தைரியமான பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக நமது அரசாங்கம் தொடர்ந்து பணியாற்றும் என்று நான் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறேன். 'நிலையான எதிர்காலத்திற்கு இன்று பாலின சமத்துவம்' என்ற சர்வதேச எண்ணக்கருவின் கீழ் கொண்டாடப்படும் இம்முறை சர்வதேச மகளிர் தினத்தில் உங்களுக்கு எதிரான வன்முறைகளும் பாகுபாடுகளும் இலங்கை சமூகத்திலிருந்து துடைத்தழிக்கப்படும் தினத்தை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

'அவள் ஒரு நாடுஇ ஒரு தேசம்இ ஒரு உலகம்' என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தின் ஊடாக நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் பெண்களின் பங்கு சரியான முறையில் பாராட்டப்படும் என நம்புகிறேன்.

கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் ஏற்பட்ட பல்வேறு சிரமங்களை சமாளிப்பதற்கு தொலைநோக்கு சிந்தனையுடன்இ சிக்கனமாகவும் பொறுமையாகவும் செயற்படும் பெண்கள் நாட்டில் காணப்படும் சவால்களை வெற்றி கொள்வதற்கு பெற்றுக் கொடுக்கும் சிறந்த பங்களிப்பு நம் அனைவருக்குமான தைரியமாகும்.

நீங்கள் 'அவளுக்கு' பெருமை சேர்ப்பதற்கு இருமுறை சிந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்





**(குகதர்சன்)**

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளிகளில் குடும்பங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இநநிகழ்வில் ஜேர்மனி ஸ்டுட்காட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எம்.சியான், பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.தாசிம், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.எழிலவணம், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 50 மாற்றுத்திறனாளிகளில் குடும்பங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு ஜேர்மனி ஸ்டுட்காட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

# தேசிய சேமிப்பு வங்கி திருமலை கிளையின் ஏற்பாட்டில் மகளிர் தினம்





**(கதிரவன்)**

தேசிய சேமிப்பு வங்கி திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் மகளிர் தினம் சனிக்கிழமை 2022.03.05 நடைபெற்றது.

திருகோணமலை கண்டி வீதியில் அமைந்துள்ள சிலிங்கோ நிறுவன கேட்போர் கூடத்தில் இது கொண்டாடப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கி திருகோணமலை கிளை உதவி முகாமையாளர் திருமதி நிரோஷினி ரமேஷ் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் கிரியெல்ல , மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவர்ணா டீபாணி, திருகோணமலை பொலிஸ் தலைமையக பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஜி.குணவர்த்தன , வங்கியின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் சி.சிவசொருபன், கந்தளாய் கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வங்கி வாடிக்கையாளர்களின் அனுபவம் பகிரப்பட்டதுடன் அரங்க ஆற்றுகையும் நிகழ்த்தப்பட்டது.

சொரோமி சித்திரா என்ற வாடிக்கையாளருக்கு 3மில்லியன் தனிநபர் கடனுக்கான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்ட பெண் வாடிக்கையாளர்களுக்கு நினைவு பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

# வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலவச மருத்துவ முகாம்








**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

சயில் பண்ட் மற்றும் வொயிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் நுவரெலியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடாத்திய வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று லிந்துலை மெராயா பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 100 ற்கு அதிகமான வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்துக் கொண்டனர். இந்நிகழ்வில் வொயிஸ் நிறுவனத்தின் நுவரெலியா மாவட்ட பொறுப்பதிகாரி தர்மேந்திரராஜா, நுவரெலியா மாவட்ட சமூக உத்தியோகத்தர் வி.ஏ.பிரியந்தயடி சில்வா, பிரதேச சமூக உத்தியோகத்தர் ஆர்.டி.குமாரதாஸ ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# சிறந்த கொழுந்து பறிப்பாளர் போட்டி



**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் நானுஓயா சமர்செட் தோட்ட நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண் தொழிலாளர்களுக்கான 2022 ம் ஆண்டு சிறந்த கொழுந்து பறிப்பாளர் போட்டி நிகழ்ச்சிகள் சமர்செட் தோட்டத்தில் இடம்பெற்றன.

இதன்போது தோட்ட அதிகாரி கோசல விஜேசேகர, உதவி அதிகாரிகள் அனுஷ்க ஜயசுந்தர,கெனித் கமகே, நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் தோட்ட உத்தியோகத்தர்கள் பலர் கலந்துக்கொண்டனர். இருபது நிமிடங்களில் பறிக்கப்பட்ட கொழுந்தின் நிறைக்கு ஏற்ப வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதற்கேற்ப சீதையம்மாள் முதலாம் இடத்தையும்; புஸ்பலதா இரண்டாம் இடத்தையும் யோகராணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இதன்போது வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும், பெறுமதிமிக்க பரிசுப் பொருட்களும் தோட்ட நிர்வாகத்தால் வழங்கி வைக்கப்பட்டு தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.